**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 428/2023**
**Prosecution Witness : 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு.பாலாண்டி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு.சேதுராமன்** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், தேவாரம், கோம்பை வட்ட காவல் நிலையம்,** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **தேனி** | **Age** | : | |
| | | | **Dated** | : | **21.05.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது தேனி மாவட்டம் தேவாரம், கோம்பை வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா வட்ட காவல் ஆய்வாளராக 12.01.2022 முதல் 17.05.2023 வரை பணியில் இருந்தேன். கடந்த 04.05.2023ம் தேதி தாடிக்கொம்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகரன் என்பவரால் பதிவு செய்யப்பட்ட தாடிக்கொம்பு காவல் நிலைய குற்ற எண். 156/2023, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச. வழக்கில் முதல் கட்ட விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த இந்த வழக்கு கோப்பினை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, சம்பவ இடம்

சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு, சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்தபோது, சார்பு ஆய்வாளரிடம் சொன்னதுபோலவே என்னிடமும் சொன்னதால், நான் தனியாக மாதிரி வரைபடம் மற்றும் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. மேற்படி மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் வேளாண்கன்னி, தவாசாம்சோபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று பிரேத வைப்பறையில் வைக்கப்பட்டிருந்த இந்த வழக்கில் காயம்பட்டு இறந்துபோன லில்லி புளோரா என்பவரின் பிரேதத்தினை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 13.00 மணிக்கு பார்வையிட்டு பிரேத விசாரணை மேற்கொண்டு, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு முதல்நிலைய காவலர் திரு.ஜெயச்சந்திரன் என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து மருத்துவர் வசம் பிரேதத்தை ஒப்படைத்தேன்.

பின்னர் புகார்தாரர் திரு.ஜான்கிறிஸ்டியன், சாட்சி சாலமன் ஆலன் ரூபன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் திரு.ஜெயச்சந்திரன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கடந்த 07.05.2023 ம் தேதி மாலை 7.00 மணியளவில் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் கடந்த 08.05.2023 ம் தேதி எதிரி ஓட்டி வந்த TN 57 CX 4546 என்ற பதிவு எண் கொண்ட ராயல் என்பீல்டு வாகனத்தை ஆய்விற்காக வாகன ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் விபத்து

பதிவேடு, பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் வாகன ஆய்வறிக்கையைப் பெற்று, 15.05.2023ம் தேதி பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.தௌபிக் அகமது மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இளங்கோ ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து 15.05.2023ம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279 மற்றும் 304(A) இ.த.ச. வின்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இவ்வழக்கில் முதல் விசாரணை மேற்கொண்ட சார்பு ஆய்வாளர் அசா.1 ஜான் கிறிஸ்டியனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். அசா.1 விபத்தை நேரில் பார்த்த சாட்சி கிடையாது என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்த நபர் யாரும் இந்த வழக்கில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவத்தை பார்த்த சாட்சிகளாக முன்னிறுத்தப்பட்ட அசா.2 மற்றும் அசா.3 விபத்தில் இறந்துபோனவரின் உறவினர்கள் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திற்கு நான் விபத்து நடந்த அன்று மதியம் 12.15 மணியவில் சென்றேன். சம்பவ இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரிதான்.

விபத்து சமயத்தில் எதிரி மதுபோதையில் இருந்ததாக சாட்சிகள் யாரும் என்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு அருகே பேருந்து நிறுத்தம் உள்ளதா என்றால்,

75 மீட்டர் தொலையில் உள்ளது. வரைபடத்தில் விபத்து நடந்த இடத்திற்கு அருகே பேருந்து நிறுத்தம் இருந்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே பேருந்து நிறுத்தம் இருப்பதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரையும் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர் வயதானவர் என்றும், வயது முதிர்வு காரணமாக அவர் மயக்கம் அடைந்து எதிரியின் வாகனத்தில் வந்து விழுந்துவிட்டார் என்றும், விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:–** இல்லை.

**Taken down by me/before me in open court on 21.05.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.05.21 16:50:25 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**